விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: நான்கு

Valampurii

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 தை 29 திங்கட்கிழமை (12.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 55

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## எதிர்க்கட்சிக்கு நோய் ஏற்படுத்த முயன்ற அரசுக்கு சிக்குன்குனியா ஏற்பட்டுவிட்டது



### ஐ.தே.க.தலைவர் ரணில் விபரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்க் கட்சியை நோய்க் குள்ளாக்கி பலவீனமடையச் செய்ய முயற்சித்தார். ஆனால் இன்று அரசாங்கத்திற்கே சிக்குன்குனியா ஏற்பட்டு விட்டது.ஸ்திரமான அரசாங்கம் தற்போது இல்லை. ஸ்திரமற்ற நிலையில் இருக்கும் அரசாங்கத் தால் சமாதானத்தையும் ஏற்படுத்த முடியாது. அதே போல் யுத்தம் செய்யவும் முடியாது என எதிர்க்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

கட்சியின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பாக விளக் கமளிக்கும் ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுக்குழுக்கூட் டம் நேற்று முன்தினம் மாலை தம்புள்ளையில் நடை பெற்ற போது அங்கு உரையாற்றுகையில் அவர் இவ் வாறு தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்டோ சாரதி சுட்டுக்கொலை

(வவுனியா)

வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் நேற்று பகல் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரி வித்தள்ளனர்.

குறித்த நபர் முச்சக்கர வண்டி ஒன்றில் இருந்த வேளையில் சுட்டுக்கொல்லப்பட்டிருக் கலாம் எனவும் கொல்லப்பட்டவர் வவுனியா அம்பலாங் கொடலப் பகுதியை சேர்ந்தவர் எனவும் பொலிஸாரால் அடையாளம் காணப் பட்டுள்ளார். (ச-3)

## யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உடனடியாக இரத்து செய்யக்கோரி உண்ணாவிரதம்

### பிக்குகள் முன்னணி ஏற்பாடு

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கைகளை இரத்து செய்யும் வரை தொடர் உண்ணாவிரதப் போராட் டம் ஒன்றை இன்று முதல் ஆரம்பிக்கவுள்ள தாக தேசிய பிக்கு முன்னணி அறிவித்துள்ளது.

மூன்று அமைச்சுக்களை தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்த ஜனாதிபதி போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச்செய்ய நட வடிக்கை எடுக்கவேண்டுமென பிக்கு முன்ன ணியின் தலைவர் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்களின் அதிகரிப்பை அடுத்து வரவு செலவுத்திட்டத்தில் திருத்தம்?

(கொழும்பு)

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் அப்போ தைய அமைச்சுக்களுக்கு நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டிருந்த வேளையில் இருந்ததைவிட அண்மையில் அமைச்சரவையின் எண்ணிக் கை அதிகரித்துள்ளபடியால் அவற்றுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் வகையில் வரவு செலவுத் திட்டத்தில் திருத்தம் கொண்டுவர நிதி அமைச்சு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரியவருகிறது.

நாடாளுமன்றத்தில் 2007 ஆம் ஆண் டுக்கென அங்கீகரிக்கப்பட்டுள்ள வரவு செல வுத்திட்ட நிதி ஒதுக்கீடுகளின் எல்லைக்குட்பட்ட வகையில் இந்த புதிய அமைச்சுகளும் நிதி வசதிகளை பெறக் (04 ஆம் பக்கம் பார்க்க)

# அரசின் மீது நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வருவதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானம்

### 11 பேரின் ஆதரவு திரட்ட முயற்சி

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளையும் அரசில் உள்ள அதிருப்தியாளர்க ளையும் உள்ளடக்கி அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக எதிர்க்கட்சிகள் இரகசியமாக சந்தித்து கூட்டங் களை ஏற்படுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஏற்படுத்தி பொதுத் தேர்தலை நடாத்த முயற்சி செய்து வருவதாக கூறப் பட்டது. (04 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுப்பிட்டியில் கடத்தப்பட்ட இருவர் நிலாவரையில் சடலமாக மீட்பு!

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டிப் பகுதியில் நள்ளிரவில் கடத் தப்பட்ட இருவர் நேற்று அதிகாலை நிலாவ ரைச் சந்திக்கு அண்மையில் சூட்டுக்காயங்க ளுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் சிறுப்பிட்டி மேற்கைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான செல் லையா மயில்வாகனம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அமைச்சர்கள் மூவரையும் கைது செய்ய திரைமறைவில் திட்டம்

(கொழும்பு)

பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர்கள் மூவரும் அவசரகாலச் சட்டத் தின் கீழ் கைதுசெய்யப்படலாம் என தகவல் கள் வெளியாகியுள்ளன.

நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளை வித்த செயற்பாடுகளை மேற்கொண்டார்கள் என்ற குற்றத்திற்காகவும் அரசுக்கு எதிரான முயற்சிகளில் ஈடுபட்டார்கள் என்பதற்காக வும் அவர்களை (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் அழைப்பு புதிய விடயம் இல்லை

### இளந்திரையன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு பேச்சுவார்த்தைக்கு முன் வரவேண்டுமென்ற ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷவின் அழைப்பானது அடிப்படையற்றது என தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணு வப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் கூறினார்.

கடந்த 3 ஆம் திகதி வாகரைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ ,விடுதலைப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி நாடு திரும்பியதும் புதிய அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் மாலைதீவு மற்றும் சீன விஜயங்களின் பின்னரே கடந்த வெள்ளிக் கிழமை பதவி நீக்கம் செய்யப்பட்ட மூன்று அமைச்சர்களுக்குப் பதிலாக புதிய அமைச் சர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட அநுரா பண்டாரநாயக்கா,மங்கள சமரவீர , சிறப்பதி சூரியாராட்சி ஆகியோர் வகித்த அமைச் சுப் பொறுப்புக்கள் தற்போது ஜனாதிபதி வச மே உள்ளது.

மேற்படி மூன்று அமைச்சர்களை பதவி நீக்குவதற்கு முன்னர் (04 ஆம்பக்கம்பார்க்க)

## மங்களவின் பதவி பறிப்பு மாத்தறையில் எதிர்ப்பு

(கொழும்பு)

முன்னாள் துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சரும் மாத் தறை பகுதி சுதந்திரக் கட்சியின் அமைப் பாள ருமான மங்கள சமரவீரவை பதவியிலிருந்து நீக்கியமைக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவுக்கு கொலை அச்சுறுத்தல்!

### பாதுகாப்பு பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பாது காப்புத் தொடர்பான பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.தொலைபேசிஊடாக விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் குறித்து பாதுகாப்புத்தரப்பினர் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

விமர்சிக்கும் உரிமைகள் அனைவருக்கும் உள்ளது. இந்நிலையில் பயங்கரவாதத்தை அழிப்பதற்காக செயற்படும் தலைவர் ஒருவ ருக்கு இவ்வாறான அச்சுறுத்தல் இருப்பது ஆச்சரியத்துக்குரிய விடயம் அல்ல என ஹெ கலிய ரம்புக்வெல மேலும் தெரிவித்தார்.(ச-3)

## ஊரெழுப் பகுதியில் ஆயுதங்கள் மீட்பு

(யாழ்ப்பாணம்)

ஊரெழுப் பகுதியில் வெடிபொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாது காப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இராணுவத்தினர் மேற் கொண்ட தேடுதல் (04 ஆம் பக்கம் பார்க்க)

# மாவீரர் துயிலும் இல்லங்கள் சேதமாக்கப்படுகின்றன

## விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

வாகரை கண்டலடியில் அமைந்திருந்த மாவீரர் துயிலும் இல்லம் படையினரால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளது. தமது வெற்றியை அடையாளப்படுத்தும் வகையில் கனரக இயந்திரங்களின் உதவியுடன் கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தை முற்றாக அழித்துள்ளனர் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச ஜனநாயக விதிகளின்படி போர்க் கைதிகள், காயமடைந்தவர்கள், போர் நினைவாலயங்கள் என்பவை யார் வசம் இருந்தாலும் மதிக்கப்பட வேண்டியவை.

போரில் வீரமரணமடைந்த போராளிகளின் உடல்களை அடக்கம் செய்யும் பிரதேசம் மாவீரர் துயிலும் இல்லமாகும். இது தமிழ் மக்களின் மிக விசேடமான நினைவுச் சின்னமாகும்.

மரணமடைந்த வீரர்களின் உறவினர்கள் தமது உறவுகளுக்கு வணக்கம் செலுத்தும் முகமாக இவ்வில்லங்களுக்குச் சென்று வருவது வழமை.

அரசு தனது இனப்போரின் ஒரு பகுதியாக மாவீரர் துயிலும் இல்லங்களை நீண்ட காலமாக அழித்து வருகின்றது என விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (எ-5)

# யாழ்ப்பாணத்திற்கு புடைவைகள் கப்பல் மூலம் அனுப்ப ஏற்பாடு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டிற்கு புடைவை வகைகளை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த ஓகஸ்ட் 11 ஆம் திகதி ஏ-9 வீதி மூடப்பட்ட பின்னர் இதுவரை புடைவை வகைகள் யாழிற்கு எடுத்து வரப்படவில்லை. இந் நிலையில் புடைவைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்படும் புடைவைகள் தனியார் கடைகள் ஊடாக விற்பனை செய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தீர்மானித்திருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச-5)

# யாழிற்கு அனுப்பி வைப்பதற்கு உரவகைகள் தயார் நிலையில்!

## கப்பலின் வருகைக்காக காத்திருப்பு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டிற்கு அனுப்பி வைப்பதற்காக உரவகைகள், கிருமி நாசினிகள் மற்றும் கால்நடைத் தீவனங்கள் என்பன தயாராகவுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

காங்கேசன்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் இந்துருவலி மற்றும் ஜெங்கிளிப்பர் ஆகிய கப்பல்களும் பொருள்கள் இறக்கி மீண்டும் திரும்பியவுடன் இப்பொருள்கள் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்.அரச அதிபரின் வேண்டுகோளுக்கமைவாக அரிசி, சீனி, பருப்பு, சிவப்புப் பச்சையரிசி, 500 தொன் பால்மா வகைகள் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களும் அனுப்புவதற்குத் தயாராகவுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச-5)

# சவர்க்கார உற்பத்திக்குத் தேவையான மூலப் பொருள்கள் அனுப்பி வைப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சவர்க்கார உற்பத்தியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சவர்க்கார உற்பத்திக்கான மூலப் பொருள்களை விரைவாக அனுப்பி உற்பத்தியை ஊக்குவிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் சவர்க்கார வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் சவர்க்கார உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்கள் அரச அதிபர் க.கணேஷைத் தொடர்பு கொண்டு தமக்குத்தேவையான மூலப் பொருள்களைப் பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து சவர்க்கார உற்பத்திக்குத் தேவையான கொசி சோடா உட்பட மூலப் பொருள்களை விரைவாகக் கப்பலில் அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# அத்தியாவசிய உணவுப் பொருள்களை பங்கீட்டு அடிப்படையில் வழங்க பணிப்பு

யாழ்.குடாநாட்டிற்கான அத்தியாவசிய உணவுப் பொருள்களைத் தொடர்ந்தும் பங்கீட்டு அடிப்படையிலேயே விநியோகிக்குமாறு யாழ்.அரச அதிபர் க.கணேஷ் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற அத்தியாவசிய தேவைகள் தொடர்பான மாநாட்டில் பிரதேச செயலர்களுக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதனடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களில் அரிசி, பருப்பு, சீனி என்பன பணத்திற்கு பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

இதேவேளை கோதுமை மாவின் தட்டுப்பாடு இன்னும் சில தினங்களில் வழமைக்குக் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அண்மையில் தாக்குதலுக்கு உள்ளான சிற்றிஒவ் லிபர்பூல் கப்பலிலிருந்து கோதுமை மா இறக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-3)

# பிரபல சித்தவைத்தியர் குகமூர்த்தி காலமானார்

பிரபல சித்தவைத்தியர் வேலாயுதம்பிள்ளை குகமூர்த்தி கடந்த திங்கட்கிழமை தனது 65-வது வயதில் கொழும்பில் காலமானார்.

சித்த வைத்திய முறையில் ஆழமான அறிவு கொண்ட அவர், சைவ சமயத்தின் மீது அசையாத நம்பிக்கையுடன் சைவ சமய வாழ்க்கை நெறியினை மிக இறுக்கமாகக் கடைப்பிடித்து வாழ்ந்தார்.

இவர் தொலைத்தொடர்புத் திணைக்களத்தில் தபால் தொலைத்தொடர்பு மேற்பார்வையாளராகவும் பணியாற்றியுள்ளார். (அ)

# அடுத்த கப்பலில் ரயர் வரும்!

யாழ்.குடாநாட்டிற்கு 35 ஆயிரம் ரயர் மற்றும் ரியூப் கப்பலில் அனுப்பி வைக்கப் படவுள்ளது.

ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்ட ரயர்கள் பாடசாலைகள் ஊடாக மாணவர்களுக்கு விநியோகிக்கப்பட்டன. தற்போது அனுப்பி வைக்கப்படவுள்ள ரயர் மற்றும் ரியூப் டை குடாநாட்டில் அனைவரும் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப் பட்டது. (ச-5)

# அநுராவை பிரதமராக்கப் பிரேரணை

(கொழும்பு)

சிறலங்காவின் பிரதமராக அநுரா பண்டாரநாயக்காவை நியமிக்குமாறு கோரும் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஜே.வி.பி., ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பிரிவு ஆகியன கூட்டாக இந்தக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் சமரவீரவின்ஏற்பாட்டில் இந்த அரசியல் நகர்வு மேற்கொள்ளப்படவுள்ளது. (ச-5)

# நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கண்ணகி அம்மன் ஆலய பரிபாலன சபையின் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக க.விஷ்வநாதனும் செயலாளராக நா.அகிலனும் பொருளாளராக அ.சபேஷனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொண்டர் சபைத் தலைவராக சி.கௌரிதரனும் செயலாளர் சி.சாந்தன், பொருளாளர் அ.தபேஷன் ஆகியோரும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை பரிபாலன சபையில் 18 உறுப்பினர்களும் தொண்டர் சபையில் 12 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ-1)

# சலவைச் சோடா அனுப்ப ஏற்பாடு

யாழ்.குடாநாட்டு சலவைத் தொழிலாளர்களுக்கு விநியோகிப்பதற்கு யாழ்.அரச அதிபரினால் கேட்கப்பட்ட சலவைச் சோடா விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலக வட்டாரம் தெரிவித்தது.

சலவைச் சோடா, நீலம், சவ்வரிசி ஆகியன தற்போது அனுப்புவதற்கு தயாராகவுள்ளதாகவும் அவை விரைவில் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

# எறிகணைத் தாக்குதல்களால் உன்னிச்சைகுளம் உடையும் அபாயம்

(கொழும்பு)

உன்னிச்சை , ஆயித்தியமலை ஆகிய பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்படும் எறிகணைத் தாக்குதல்களினால் உன்னிச்சைக் குளத்திற்கு ஆபத்து ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி குளம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைந்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பாரிய குளம் இதுவாகும். 28 அடி உயர நீர் கொள்வனவு கொண்ட இக்குளம் 1957 ஆம் ஆண்டு உடைப்பெடுத்து பலரைப் பலிகொண்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது அப்பகுதிகளை நோக்கி வீசப்படும் எறிகணை குளத்தை அண்மித்த பகுதிகளில் வீழ்ந்து வெடிப்பதாகவும் இதனால் குள அணைக்கட்டுக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் மட்டக்களப்பு நீர்ப்பாசனத் திணைக்களம் பாதுகாப்புப் படையினரின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளதாக அறிய வருகின்றது.

இக்குளம் உடைப்பெடுக்குமானால் இம் மாவட்டத்தில் பாரிய அளவில் உயிர்ச் சேதம் ஏற்படலாம் என அஞ்சப்படுகின்றது. (ச)

# பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

புண்ணிய நாச்சியம்மையார் தினத்தை முன்னிட்டு யாழ்.சைவ பரிபாலன சபையினரால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வரும் பண்ணிசைப் போட்டியும் திருக்குறள் மனனப் போட்டியும் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.வண்.நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ச)


# மரண அறிவித்தல்

## அமரர் திரு.வா.ஆழ்வாப்பிள்ளை

(இளைப்பாறிய அதிபர் ஸ்ரீ நாரதா வித்தியாலயம், இளைப்பாறிய ஆசிரியர்- பலாங்கொட)



கரவெட்டி தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.வா.ஆழ்வாப்பிள்ளை அவர்கள் 08.02.2007 வியாழக்கிழமை இரவு கொழும்பில் காலமானார்.

அன்னாருடைய பூதவுடல் கொழும்பு லங்கா பன்சாலையில் வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு குஞ்சிபொறளையில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கரவெட்டி தெற்கு,
கரவெட்டி,

நவராஜா குடும்பத்தினர்

(618)


# குடும்பஸ்தர்கள் இருவர் நேற்று அதிகாலை கடத்தல்


(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு வேளையில் நேற்று இனந்தெரியாத ஆயுததாரிகளினால் இருவர்கடத்திச் செல்லப்பட்டதாக உறவினர்களால் யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏழாலை தெற்கு மயிலங்காட்டைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான நாகலிங்கம் வேலாயுதம் (வயது-45) நேற்று அதிகாலை 4 மணியளவில் அவரது வீட்டிற்குச் சென்ற ஆயுததாரிகளினால் கடத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை அரியாலை முள்ளி வீதியைச் சேர்ந்த இராஜசிங்கம் சுரேஷ் (வயது-19) என்ற இளம் குடுபஸ்தர் நேற்று அதிகாலை 2 மணியளவில் வீட்டிற்குச் சென்ற 15 பேர் கொண்ட ஆயுததாரிகளினால் கடத்திச் செல்லப்பட்டதாக யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-5)

மக்கள் வங்கியின் சுதந்திர வாரத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு ரூபா 500 வெகுமதியளிக்கும் திட்டத்தின் கீழ் மக்கள் வங்கியின் யாழ்.பிரதான வீதி கிளை முகாமையாளர் எஸ்.கென்றி யாழ். போதனா வைத்தியசாலை பிரசவ விடுதியில் தாயார் ஒருவருக்கு இசுருதான சான்றிதழ் வழங்குவதையும் அருகில் வங்கி உத்தியோகஸ்தர்களையும் காணலாம்.



பிறரிடத்தில் அன்பும் சகிப்புத்தன்மையும் காட்ட வேண்டுமே யன்றி பழிவாங்கும் போக்குக் கூடாது.
-டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## சர்வதேசத்தின் தலையீடு உடனடியாகத் தேவை

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியில் சர்வதேசத்தின் தலையீடு அவசரமாகத் தேவைப்படுகின்றது.

யுத்தம் ஒருபுறம், அரசியல் குழப்பம் மறுபுறம் என எல்லாமுமே குழப்பமடைந்துள்ளதால் நாட்டில் மிகப் பெரியதோர் யுத்தமும் நிர்வாகக் கட்டுமானக் குழப்பமும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

இந்நிலைமையை உடனடியாகக் கட்டுப்படுத்தத் தவறுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிறுபான்மையின மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பேராபத்து நிகழும் என்பது உறுதி.

யுத்தம் நடக்கும் நாட்டில் ஆட்சி குழம்புமாயின் கொள்ளைகளும் கொலைகளும் சர்வசாதாரணமாக நடைபெறும்.

இதில் இலங்கையைப் பொறுத்தவரை ஆட்சி குழப்பமில்லாமல் நடந்த போதே கொள்ளையும் கொலையும் வழமையான நிகழ்வாகவிருந்தன.

அவ்வாறாயின் ஆட்சிக் குழப்பத்தின் நிலைமை எவ்வாறு அமையும் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பதற்கு அதிகளவு நேரம்எடுக்கமாட்டாது எனலாம்.

ஆளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் செய்து கொண்ட பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை போலி நாடகம் என்பது இப்போது உறுதியாகிவிட்டது.

இரண்டுபிரதான கட்சிகளும் இணைவதன் மூலமே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என கூறிய இந்தியா இரு கட்சிகளினதும் உடன்படிக்கை வெறும் புஷ்வானம் என்பதையறிந்தும் மௌனமாகவிருக்கின்றது.

இந்தியா மட்டுமல்ல உலக நாடுகள் அனைத்தும் இது விடயத்தில் மௌனம் சாதிப்பது சந்தேகத்தை உண்டுபண்ணுவதாகவே அமையும்.

இலங்கை இனப்பிரச்சினைக்குச் சமாதான வழியில் தீர்வு காணப்பட வேண்டுமென கூறுகின்ற உலக நாடுகள் அதனை நடைமுறைப்படுத்துவதில் அரசுக்கு அழுத்தம் கொடுக்கத் தவறிவிட்டன.

உள் நாட்டுப் போர்என்ற ஒரே காரணத்தைமுன் வைத்து உலக நாடுகள் பின்வாங்கிக் கொண்டாலும் இலங்கையில் நடைபெறும் யுத்தம் பயன்படுத்தப்படும் பேராயுதம் என்பவற்றைப் பார்க்கும் போது இரண்டு நாடுகளுக்கிடையே நடைபெறும் யுத்தமாகவே அதனைக் கணிக்க வேண்டும்.

போர் விமானங்கள், பீரங்கிக் குண்டுகள், யுத்தக் கப்பல்கள் என சிறுபான்மையினத்திற்கு எதிராகப் பயன்படுத்தப்படும் ஆயுதங்கள் உள் நாட்டுப் போருக்குரியவையா? என்பதை ஆராய்வது உலகின் கடமையாகும்.

அதேநேரம் இலங்கை அரசு ஆயுதங்களை உலக நாடுகளிடமிருந்தே கொள்வனவு செய்கின்றது என்பதும் அந்த ஆயுதங்களைச் சிறுபான்மையினமான தமிழ் மக்களுக்கு எதிராகப் பயன்படுத்துகின்றது என்பதும் நன்கு தெரிந்த விடயமே.

ஆயுதத்தை வழங்கும் அதேநாடுகளே யுத்தத்தை நிறுத்துமாறு கேட்பது பொருத்தப்பாடானது அல்ல.

ஆக, ஒருபுறும் யுத்தத்திற்கான ஊக்குவிப்பும் மறுபுறம் சமாதானத்திற்கான நடிப்பும் என்றவாறு உலகின் ராஜதந்திரம் நகர்வடைகின்றது.

இஃது இலங்கை மண்ணில் தொடர் அழிவைத் தருமேயல்லாமல் அமைதியை ஒருபோதும் கொண்டு வரமாட்டாது. எனவே உலக நாடுகள் தமது தார்மீகப் பணியை உணர்ந்து குழப்பமடைந்துள்ள இலங்கையில் தலையிடுவது தேவையானதாகும்.

# ஆடம்பர வாகனங்களுக்கு நிதி வழங்குமாறு அமைச்சர்கள் விடுத்த கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

அமைச்சர்கள், அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் பலர் சுமார் 100 இலட்சம் ரூபா பெறுமதியான சொகுசு வாகனங்களைப் பெற நிதியினை வழங்குமாறு விடுத்துள்ள கோரிக்கையை திறைசேரி நிராகரித்துள்ளதாக அதன் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தங்களின் அமைச்சு நடவடிக்கைகளுக்காக இவ்வாறான புதிய வாகனங்களுக்கான நிதியினைப் பெற்றுத் தருமாறு இவ் அமைச்சர்கள் திறைசேரியிடம் விண்ணப்பித்திருந்தனர்.

அரச செலவைக் கட்டுப்படுத்துப் பொருட்டே திறைசேரி இவ்வாறான கோரிக்கையை நிராகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. புதிதாக அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களுக்கு மாத்திரமே வாகனம் பெற்றுக் கொள்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய புதிய அமைச்சர் ஒருவர் சுமார் 75 லட்சம் ரூபா பெறுமதியுடைய வாகனத்தையே கொள்வனவு செய்ய முடியும். இதற்கு மேலதிக பெறுமதியான வாகனத்தைப் பெற்றுக் கொள்வதாயின் அதற்கான அமைச்சர், ஜனாதிபதியின் மூலம் அனுமதியைப் பெற்றிருக்க வேண்டுமெனவும் அவ் உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# வெனிஸூலா அரசு வழங்கிய சுனாமி நிதிக்கு என்ன நடந்தது

## ஜே.வி.பி. எம்.பி. கேள்வி

(கொழும்பு)

சுனாமி அனர்த்த நிவாரணப் பணிகளுக்காக வெனிஸூலா அரசாங்கத்தால் வழங்கப்பட்ட 62 லட்சம் அமெரிக்க டொலர் நிதிக்கு என்ன நடந்தது என அறியவிரும்புவதாக ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத் கூறியுள்ளார்.

மேற்படி நிதி வெனிஸூலா ஜனாதிபதி ஹியூகோ சாவேஸ் ஆரம்பித்த நிதி சேகரிப்புத் திட்டம் ஒன்றின் மூலம் வெனிஸூலா மக்களால் திரட்டப்பட்டது எனவும் 2005 ஆண்டு ஜூலை மாதம் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பதவிக் காலத்தில் மேற்படி நிதி இலங்கைக்கு வழங்கப்பட்டது எனவும் விஜித ஹேரத் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இந்த நிதி எதற்காக பயன்படுத்தப்பட்டது என வெனிஸூலா அரசாங்கம் விசாரித்துள்ளதாகவும் அதற்குஇதுவரை பதில் வழங்கப்படவில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட அறுகம்குடாவில் ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக வெனிஸூலா அரசாங்கம் மேற்படி நிதியை வழங்கியது. வீடுகள் நிர்மாணிக்கப்பட்ட பின் அக்கிராமத்தைத் திறந்து வைப்பதற்கு தூதுக்குழு ஒன்றை அனுப்புமாறு வெனிஸூலா அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கப்படும் எனவும் வாக்குறுதியளிக்கப்பட்டது.

ஆனால் ஆயிரம் வீடுகளை அமைக்கும் திட்டத்திற்கான அறிகுறி எதுவும் தென்படாததால் மேற்படி நிதிக்கு என்ன நடந்தது எனத் தெரியாமல் வெனிஸூலா திகைப்படைந்துள்ளது எனவும் விஜித ஹேரத் எம்.பி. கூறியுள்ளார்.

வெனிஸூலா அரசாங்க அதிகாரிகள் குழுவினருக்கும் ஜே.வி.பி. பிரதிநிதிகள் குழுவொன்றுக்கும் இடையிலான சந்திப்பு அண்மையில் கொழும்பில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (எ-1)

# ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்!

## சுதந்திர ஊடக இயக்கம் தெரிவிப்பு

கைதுகள் மேற்கொள்ளப்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கைது செய்யப்படுபவரது குடும்பத்தினர் அல்லது உறவினர்களுக்கு அது தொடர்பாக அறியத் தருதல் மற்றும் அவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதைத் தெரியப்படுத்தல் போன்ற வழமையான ஒழுங்குகள் பின்பற்றப்பட வேண்டுமென்று அரசாங்கத்திடம் சுதந்திர ஊடக இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அக்குணப் பத்திரிகையின் ஊடகவியலாளர்களும் தொழிற்சங்கவாதிகளுமான மூன்று பேர் கைதுசெய்யப்பட்டு விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தொடர்பாக சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஊடகமும் பயங்கரவாதமும் என்ற தலைப்பில் சுந்திர ஊடக இயக்கத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையின் விபரம் வருமாறு;

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் எந்தவொரு சட்டபூர்வமான விசாரணைகளுக்கும் ஊறு விளைவிக்கவோ அன்றி அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவோ நாம் விரும்பாத அதேவேளை, கைதுகள் மேற்கொள்ளப்படும் எந்தச் சந்தர்ப்பத்திலும் கைது செய்யப்படுபவர்களின் குடும்பத்தினர் அல்லது உறவினர்களுக்கு அது தொடர்பாக அறியத் த்ருதல் மற்றும்அவர்கள் எங்கே தடுத்துவைக்கப்பட்டுள்ளனர் என்பதைத் தெரியப்படுத்தல் போன்ற வழமையான ஒழுங்குகள் பின்பற்றப்பட வேண்டுமென்பதையே எமது பெப்ரவரி ஆறாம் திகதி அறிக்கையில் நாம் வலியுறுத்தியிருந்தோம்.

சர்வதேச சமூகத்தின் ஒரு அங்கம் என்ற வகையில் சர்வதேச அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த மனித உரிமை மற்றும் ஜனநாயக நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

ஊடகவியலாளர்களையும் ஊடக சுதந்திரத்தையும் பாதுகாக்கப்பாடுபடும் ஒரு அமைப்பு என்ற வகையில் டெய்லி மிறரில் வெளியான கைதுகள் தொடர்பான எதிர்ப்புக் குரல் எழுப்பியவர்களை அமைதிப்படுத்த அரசாங்கத்தினால் முடிந்திருக்கின்றது என்று பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவின் கருத்து குறித்து நாம் மிகுந்த வேதனையடைகின்றோம்.

மனித உரிமை மீறல் என்று கருதப்படக் கூடியவற்றுக்கு எதிர்ப்புக் காட்டுவதற்கு அமைப்புக்களும் தனி நபர்களுக்கும் இருக்கும் உரிமையை நாம் வலிமையாக ஆதரிக்கும் அதேசமயம் தமது நிலைமையிலிருந்து இந்த எதிர்ப்புக்கள் குறித்து விளக்கத்தையளிக்கும் அரசாங்கத்தின் உரிமையையும் நாம் ஏற்றுக் கொள்கின்றோம்.

எமக்குத் தெரிந்த வகையில் எதிர்ப்புக்களை அமைதிப்படுத்துவது என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க ஒரு ஜனநாயக நடைமுறையல்ல. இந்த மூன்று ஊடகவியலாளர்களுக்கும் பயங்கரவாத தொடர்புகள் இருப்பதான தகவல் வெளிப்படுத்தப்பட்ட விதமானது தேசிய பாதுகாப்பு என்ற பெயரில் அனைத்து எதிர்ப்புக்களையும் ஊடகசுதந்திரத்தையும் மூச்சுத்திணறடிக்கும் ஒரு செயற்பாடோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்றுள்ளது. (எ-5)

# நீக்கப்பட்ட அமைச்சர்களின் உயர் பாதுகாப்பு விலக்கல்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் பதவிகளிலிருந்து நீக்கப்பட்ட அமைச்சர்களின் உயர் பாதுகாப்புக்களும் அரசினால் விலக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தமது பாதுகாப்பை அதிகரிக்கும்படியும் அநுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர, சிறிபதி சூரியராட்சி ஆகியோர் அரசிடம் வேண்டுகோள்விடுத்த 48 மணிநேரத்தில் அவர்களின் பாதுகாப்புக்கள் விலக்கப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவுடன் இந்த மூன்று மூத்த அமைச்சர்களின் பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் பாதுகாப்பிற்கு இரு காவல்துறை உறுப்பினர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று அமைச்சர்களின் பாதுகாப்பிற்காக விசேட அதிரடிப்படையினரும் மேலதிகமாகப் பின்தொடர்ந்து செல்லும் வாகனங்களும் முன்னர் வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அமைச்சர்களின் பாதுகாப்புப் பிரிவினால்தான் மேற்படி அமைச்சர்களின் பாதுகாப்பு உறுப்பினர்கள் மீளப்பெறப்பட்டதாகவும் தமது அறிவித்தல்கள் இல்லாத இந்த அமைச்சர்களின் பாதுகாப்பில் தலையிட வேண்டாம் என்றும் இராணுவத்தினர் பணிக்கப்பட்டுள்ளனர்.

அதேசமயம் தனது உயிருக்கு அச்சுறுத்தல் உள்ளதாகவும் அதனால் பாதுகாப்பை அதிகரிக்கும்படியும் அநுரா பண்டார நாயக்கா விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அவரது பாதுகாப்பை அதிகரிக்கும்படி கடந்த வாரம் உத்தரவிட்ட மகிந்த தற்போது பாதுகாப்பை விலக்கி விட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-1)

# நாட்டை ஆபத்தான பாதையில் ஜனாதிபதி கொண்டு செல்கிறார்

## முன்னாள் அமைச்சர் மங்கள தெரிவிப்பு



(கொழும்பு)

மூன்று நாள் தனிப்பட்ட விஜயமாக சிங் கப்பூர் சென்றுள்ள ங்கள அங்கிருந்து தொலைபேசியூடாக கொழும்பு வாரப்பத்திரி க ஒன்றுக்கு தற்போதைய அரசியல் நிலை பரம் தொடர்பாக நத்துத் தெரிவிக்கையி லேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மகிந்த என்னையும் ஏனைய இருவரை யும் அமைச்சர் தவிகளில் இருந்து நீக்கியது எனக்கு ஆச்சரியத்தைத் தரவில் லை. இப்படி நடைபெறும் என்று எனக்கு முன்பே தெரியும்.

கோழைகள் தங்களால் முடிந்த அழிவுக ளைத்தான் செய் ார்கள் என முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித் ள்ளார். ஜனாதிபதி மகிந்த நாட்டை மிகவும் ஆபத் தான பாதைக்கு காண்டு செல்கிறார். அவர் என்னை பதவியில் இருந்து நீக்கி யது சுதந் திரமாகப் பேசும் உரிமையை எனக்குத் தந் துள்ளார்.

நாட்டில் நடைபெறும் படுகொலைகள், கடத்தல்கள்,மனித அவலகங்கள் தொடர்பாக என்னால் சுதந்திரமாக பேச முடியும். நானும் பதவி நீக்கப்பட்ட ஏனை இரு அமைச்சர்க ளும் நாளை ஊடகத்துறையினருடன் சந்திப்பு ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதே சமயம் பதவிகளில் இருந்து நீக்கப் பட்ட மூன்று அமைச்சர்களும் தமது தவறு களை உணர்ந்து தன்னிடம் மன்னிப்புக்கேட்டால் அவர்களை மீண்டும் அமைச்சுப் பொறுப் புக்களில் நியமிப்பதுடன் அவர்களுக்கு உயர் பாதுகாப்பும் மீள வழங்கப்படும் என மகிந்த தனக்கு நெருக்கமானவர்களிடம் கூறியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

## இலங்கை அணி வென்றது

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையில் நேற்று ராஜ் கோட்டில் நடைபெற்ற இரண் டாவது ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இலங் கை அணி ஐந்து ஓட்டங்களால் வெற்றி பெற் றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 8 விக்கெட் இழப்பிற்கு 257 ஓட்டங்க ளைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுக் கைள இழந்து 252 ஓட்டங்களைப் பெற்று தோல்வி கண்டது. நான்கு போட்டிகள் கொண்ட இத் தொடரில் மூன்றாவது போட்டி நாளை மறுதினம் கோவாவில் பகல் ஆட்டமாக நடை பெறவுள்ளது. (ச)

## ஊவரெழுப்...

நடவடிக்கையின் போதே அவை கண்டுபிடிக் கப்பட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

நான்கு இலத்திரனியல் ரெற்நேற்றர்கள் இரண்டு கைக்குண்டுகள் மற்றும் உபக ரணங்களும் அடங்குவதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் செய்தி யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

## மங்களவின்...

எதிர்ப்புத் தெரிவித்து மாத்த றைப் பகுதியில் கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

'மங்கள நாங்கள் உங்களுடன்' போன்ற சுலோகங்கள் அடங்கிய சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## ஜனாதிபதி நாடு திரும்பியதும்...

இத்தீர்மானம் தொடர்பாக ஸ்ரீ.சு.கவின் ஒழுக் காற்றுக்குழுவுடன் ஜனாதிபதிநீண்டநேரம்கலந் துரையாடினார் எனத் தெரியவருகின்றது.

அக் கலந்துரையாடலின்போது அநுரா பண்டாரநாயக்கா அரசாங்கத்தை விமர்சித்து நாடாளுமன்றத்தில் உரையாற்றியமை மங் கள சமரவீர ,ஸ்ரீபதி சூரியாராச்சி ஆகியோ ரின் நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

அநுரா பண்டாரநாயக்கா நாடாளுமன்றத் தில் ஆற்றிய உரைக்கு பதிலாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா ஆற்றிய உரை தொடர்பாக அநுரா பண்டாரநாயக்கா செய்த விமர்சனம் தொடர்பாகவும் இக் கூட்டத்தில் அலசப்பட்ட தாக கூறப்படுகிறது.

இதேவேளை ஸ்ரீபதி சூரியாராச்சி அமைச் சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதையறிந்த வுடன் அநுரா பண்டாரநாயக்காவின் இல்லத் திற்குச் சென்று நீண்ட நேரம் கலந்துரையாடி யுள்ளார். (ச)

## யுத்த நிறுத்த...

தப்பர அமில தேரர் வேண்டு கோள் விடுத்துள் ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் அவர் இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார். ஜனாதிபதியின் நற்பெய ரையும் அரசாங்கத்தை அழிப்பதற்கும் நோர்வே அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவித்த அவர் நோர்வேயின் பணியை இல்லாமல் செய்வது டன் போர். நிறுத்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்யவேண்டுமெனவும் கோரியுள்ளார். (ச-3)

## அமைச்சர்களின்...

கூடியதாக அமையும் என திறைசேரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதன்படி அபிவிருத்தி வேலைத்திட்டங் களின் அடிப்படையில் நிதிவழங்கும் ஏற்பாடு கள் மேற்கொள்ளப்படும். எதிர்வரும் ஒருவார காலத்துள் திருத்தம் செய்யப்பட்ட வரவு செல வுத்திட்ட மசோதா மீண்டும் நாடாளுமன்றத் தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படவுள் ளது என தெரிவிக்கப் படுகிறது. (ச-5)

## மரண அறிவித்தல்

### அமரர் கந்தையா தம்பித்துரை (சின்ராசா)

மானிப்பாயை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா தம்பித்துரை (சின்ராசா) நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா தங்கச்சி அம்மாவின் புதல்வரும், யோகமலரின் அன்புக் கணவரும், துரைராஜா, கந்த சாமி, பவளரத்தினம், அமரர் ராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

அமரர் நாகேஸ்வரி, துரைசிங்கம் (வர்த்தக வங்கி) ஆகி யோரின் மைத்துனரும், சிவம், சிவகுமார், சகுந்தலா, பிரேமினி சிவரூபன், சர்மிளா (மானிப்பாய் மெமோறியல் மாணவி) ஆகி யோரின் அன்புத் தந்தையும், கேதீஸ்வரன் (வேலணை பிரதேச சபை), ராகினி, குமுதினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கீர்த்திகாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியள வில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் மானிப் பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

உச்சியோடை லேன், மானிப்பாய் வடக்கு. (C-611)

தகவல். மனைவி, பிள்ளைகள்.



மாலைதீவு சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று மாலைதீவு ஜனாதிபதியுடன் இரு தரப்புப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அதனைத் தொடர்ந்து கல்வி மற்றும் கலாசாரம் தொடர்பான இரண்டு உடன்படிக்கை களும் கைச்சாத்திடப்பட்டன.

## ஜனாதிபதியின் அழைப்பு...

புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்துவிட்டு சமாதானப் பேச்சுக்கு வரவேண்டுமென அழைப்பு விடுத்திருந்தார்.

ஜனாதிபதியின் இந்த அழைப்பு ஒன்றும் புதிய விடயமில்லை. மீண்டும் மீண்டும் இத னையே கூறிவருகின்றார். இது அடிப்படை யற்றதென்பதுடன் அவரின் இந்த அழைப் புக்கு பதிலளிப்பது பயனுள்ளது என நான் நினைக்கவில்லை என கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு இளந்திரையன் கூறியுள்ளார்.

முன்னாள் ஊடகவியலாளர் இருவர் உட் பட மூன்று பேர் விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்த விடயம் குறித்து அந்த ஊடகத்துக்குக் கருத்துத் தெரி வித்துள்ள இளந்திரையன்;

முக்கிய விடயங்கள் தொடர்பாக எங்களி டம் கருத்துக்களைப் பெறும் உங்களைப் போன்ற ஊடகவியலாளர்கள் மிரட்டப்ப டுகின்றீர்கள் அல்லது கொல்லப்படுகின் றீர்கள். அரசாங்கம் மோசமான சட்டத்தைப் பயன்படுத்தி இவற்றை மேற்கொள்கின்றது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பவர்கள் மற்றும் பயங்கரவாதத்துக்குத் துணைபோகின்றவர்களுக்கு எதிராகவே நட வடிக்கை எடுப்பதாகக் கூறிக்கொண்டு அர சாங்கம் ஊடகவியலாளர்களுக்கு எதிராக வும் செயற்படுகிறது என்றார். (ச-5)

## முன்னாள்...

கைதுசெய்ய அரசு திட்டம் தீட்டியுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன.

வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண் டிருந்த மங்கள சமரவீர நாடு திரும்பியுள்ள நிலையில் மூவரையும் கைதுசெய்ய திடீர் உத்தரவு பிறப்பிக்கக்கூடும் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (ச)

## சிறுப்பிட்டியில் கடத்தப்பட்ட...

(வயது 53) என்ற குடும்பஸ்தரும் அயலில் உள்ளவரான நவரட்ணம் அருள்தீபன் (வயது 27) என்ற இளைஞருமே சூட்டுக்கா யங்களுடன் சடலமாக மீட் கப்பட்டனர்.

நேற்று அதிகாலை ஒரு மணி யளவில் குறித்த இருவரினது வீடுகளுக்குச் சென்ற 15 பேர் கொண்ட ஆயுததாரிகள் சோதனை செய் வதற்கு வந்ததாகத் தெரிவித்து அடை யாள அட்டைகளை வேண்டி விசாரணை செய்து விட்டு இருவரையும் கடத்திச் சென்றதாக விசா ரணைகளில் உறவினர்களால் தெரிவிக் கப் பட்டுள்ளது.

அவர்கள் இருவரும் கடத்தீச் சென்று அரை மணிநேரத்தில் துப்பாக்கிச் சூட்டுச் சத் தங்கள் கேட்டதாகவும் விசாரணைகளில் அயலவர்களால் கூறப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற் கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிவான் திருமதி சரோஜினி இளங்கோவன் பிரேத பரிசோத னைக்காக சடலத்தை யாழ்.போதனா வைத் தியசாலையில் ஒப்படைக்குமாறு பொலிஸா ருக்கு உத்தரவிட்டார். (ச-5)

## எதிர்க்கட்சிக்கு நோய்...

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் உரை நிகழ்த்துகையில், ஜே.வி.பி.மற்றும் ஹெல உறுமய ஆகிய கட்சிகளின் ஆதரவுடன்தான் அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது.

தற்போது அரசாங்கத்தின் செயற்பாடு பற்றி அறிந்து கொண்ட இந்தக்கட்சிகள் அரசுக்கு ஆதரவு வழங்குவது குறித்து சிந்தித்து வருகின்றது.

எதிர்க்கட்சி ஒன்று இருக்கக்கூடாது என்ற எண்ணத்தில் ஜனாதிபதி எமது கட்சியை சீர் குலைக்க முயற்சித்தார். இன்று அவருக்கு நடந்தது என்ன? எமது கட்சியைப் பலவீனப் படுத்தி நோய்க்குள்ளாக்க நினைத்த ஜனாதிபதியின் அரசாங்கத்திற்கு இன்று சிக்குன்குனியா ஏற்பட்டு விட்டது.

நான் இதைப் பார்த்து சிரிக்க மாட்டேன் ஏன் என்றால் ஜனாதிபதியைப் போல் கட்சி யைப் பிரித்து அதன் மூலம் நன்மை அடைய முயல்பவன் நான் அல்ல.

பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முப்படைத் தளபதியாக இருக்கும் ஜனாதிபதி சமாதானம் வேண்டும். சமாதானத்திற்காகப் பாடுபடு வேன் எனக்கூறுகின்றார். பாதுகாப்பு அமைச் சின் உயர் அதிகாரிகளோ யுத்த நாட்டத்தில் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு இரு வேறு கருத்துக்கள் நிலவும் போது எவ்வாறு பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்? தற்போது நடைபெறு வது அரசாங்கத்தின் ஆட்சி அல்ல. அதி காரம் உள்ள ஜனாதிபதியின் ஆட்சியே. அர சாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களை ஜனா திபதி பதவி நீக்கம் செய்துள்ளார். இதன் மூலம் குழப்பம் தான் ஏற்பட்டுள்ளது. அரசாங் கத்தின் ஸ்திரத்தன்மை குறைந்து விட்டது.

இப்போது ஸ்திரமான அரசாங்கம் இல்லை. இந்த அரசாங்கத்தால் சமாதானத் தை ஏற்படுத்த முடியாது. அதேபோல் நீண்ட நாட்களுக்கு யுத்தம் செய்யவும் முடியாது.

இந் நிலையில் அரசாங்கத்தின் பலம் குறைவடைந்து விரைவில் பொதுத்தேர்தல் நடத்துவதற்கான அறிகுறிகள் தென்படுகின் றன. ஜனாதிபதிக்கே தற்போது எதனையும் தீர்மானிக்கமுடியாதுள்ளது. விரைவில் பொதுத்தேர்தல் வரும் என்பதை என்னால் உணர முடிகிறது என்றார். (ச-5)

## அரசின் மீது நம்பிக்கை...

மிகவும் இரகசியமாக விவாதிக்கப்பட்டு வரும் இந்த நடவடிக் கையில் அரசினால் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள்,ஜனநாயக மீறல்கள்,கடத்தல்கள் ,படுகொலைகள் , ஊழல் குற்றச்சாட்டுக்கள் ,போர் தொடர்பாக பொதுமக்களை தவ றாக வழிநடத்துதல்,பதவிகளில் உள்ளவர்களின் உறவினர் களின் அத்துமீறிய தலையீடுகள் என்பன நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கான காரணங்களாகவும் முன்வைக்கப்படவுள்ளன.

இந்த தீர்மானத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு 113 வாக்குகள் தேவை. ஐ.தே.கவின் 43 உறுப்பினர்களும்,தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 22 உறுப்பினர்களும், ஜே.வி.பியின் 37 உறுப்பினர்களுமாக மொத்தம் 102 உறுப்பினர்களின் ஆதரவு தற்போது உள்ளதாகவும் மேலும் 11 உறுப்பினர்களின் ஆதரவு கள் மேலதிகமாக தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மேலதிகமாக தேவைப்படும் 11 வாக்குகளும் அரச தரப்பில் இருந்து அரசின் அண்மைய நடவடிக்கைகளால் விசன மடைந்தவர்களால் வழங்கப்படலாம் என ஐக்கிய தேசியக்கட்சி யின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

என்ன நடைபெறும் என்பதை நீங்கள் பொறுத்திருந்து பாருங்கள், என்னால் ஒன்றை மட்டும் கூறமுடியும் இங்கு ஒரு மிகப்பெரும் ஆச் சரியம் நிகழப்போகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் கடந்தவாரம் மூத்த மூன்று அமைச்சர்களின் மீது மகிந்தவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் நம்பிக்கை யில்லாப் பிரேரணையை மேலும் வலுப்படுத்தியுள்ளதாகவும் இந்த நிகழ்வு நம்பிக்கையில்லாப் பிரேரணையை விரைவாக்கி யுள்ளதுடன் அரசில் பல பிளவுகளையும் ஏற்படுத்தும் எனவும் அவதானிகள் தெரிவித்துள்ளனர். (ச-5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.